

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருநின்றவூர் நகர திமுக சார்பில் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நகரச் செயலாளர் தி. வை.இரவி தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாவட்ட நிர்வாகிகள் மா.இராஜி, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், எம்.குமார், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், வழக்கறிஞர் பெ.வினோத், வே.தியாகராஜன், ஆர்.செந்தாமரை, நகர நிர்வாகிகள் சி.கமலக்கண்ணன், வார்டு செயலாளர்கள் கோட்டீஸ்வரன், அசோக்குமார், சி.தங்கராஜ், சரவணன், ஏகாம்பரம், சலீம், மோகனகிருஷ்ணன், பால்ராஜ், சுரேஷ், வெங்கடேசன், கோபால், சதாசிவம், ராஜன், மாதவன், மு.பா. மகேஷ்குமார், பா.மேகநாதன், பிரகாஷ், கருணாநிதி, பா. முரளி, பாஸ்கரன், செந்தில்வேல், ஜெ.ரவிச்சந்திரன், ஆர்.சுகுமார், ஜீவானந்தம், க.சதீஷ்குமார், பூமணி, தி.தெ.பாபு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

### அளப்பரிய திட்டங்களை அள்ளித் தந்திருக்கிறார் நம் முதல்வர்!

# பெண்களின் பேராதரவோடு வெற்றி உறுதி! உழைத்திடுவோம் கருதி!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் அறிக்கை!

சென்னை, மார்ச் 24-

முதல்வர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஐந்தாண்டில் அளப்பரிய திட்டங்களை மக்களுக்கு அள்ளித்தந்திருக்கிறார் எனவும், தமிழ் நாட்டுப் பெண்களின் பேராதரவோடு நம் முதல்வர் தலைமையிலான கூட்டணி வெல்வது உறுதி எனவும் நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தங்கத் தமிழ் மகனே தமிழ்நாட்டை ஆள மீண்டும் வருக வருக!

தமிழ் மண்ணின் மைந்தனே, தரணி போற்றும் முதல்வரே வருக வருக!

உன் குணம் என்றுமே வள்ளல் குணம் தானே.

உன் மனம் எப்பொழுதும் மக்கள் வளர்ச்சியில் தானே.

நீ வரும் வீதியில் எங்கும் எங்கும் இன்பம் உதயசூரியன் தோரணங்கள்.

உதயசூரியன் தோரணங்கள் வாழ்த்தவும் மாலைகள் சூடவும் தமிழ் நாட்டு மக்கள் தன்நிகரில்லா முதல்வரை வரவேற்க காத்திருக்கின்றனர்.

வான் மகள் உன்னை வாழ்த்துகிறாள். பூமித் தாய் உன்னை போற்றுகிறாள்.

நம் திராவிட நாயகன் வாழிய வாழியவே என தமிழ்நாட்டு மக்கள் வாழ்த்துகின்றனர். அள்ளித்தந்த அரசின் திட்டங்களால் முதல்வரை போற்றி புகழாரம் சூட்டுகின்றனர்!

அரசுப் பள்ளி பிள்ளைகளுக்கு காலை உணவு தந்தவரே வாழ்க. வாழ்க வாழ்கவே.

பெண்கள் வாழ்வு வளம் பெற உரிமைத் தொகை தந்தவரே

வாழ்க வாழ்கவே எங்கள் வெற்றிக் கூட்டணியின் தளபதி வருக வருக வருகவே.

வருகிற தேர்தல் களத்தில் வெற்றி பெறுவது உறுதி!

பெண்களின் பேராதரவு உண்டு முதல்வருக்கு!

பிரச்சாரத்தில் காண்பார்! பெருமைமிகு கொள்வார்!

வெற்றிக் கூட்டணிக்கு வீடுதோறும் வரவேற்பு!

இவ்வாறு திருமதி. ஓவியம் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

# சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் கே.நீலகண்டன் அறிவிப்பு!

சென்னை, மார்ச்.24-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் கூட்டம் நாளை நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்றுச் சிறப்புரையாற்றுகிறார் என, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் கே.நீலகண்டன் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சென்னை தெற்கு மாவட்ட திமு கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பாக எனது (கே.நீலகண்டன்) தலைமையில் சைதைபஜார் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் (கலைஞர் அரங்கம்) நாளை ( 25.03.2026 புதன் கிழமை) மாலை 6 மணி அளவில் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பங்கேற்று எதிர் வரும் சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கின்ற நிலையில் தக்க ஆலோசனை வழங்க உள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அணியை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், தொகுதி பகுதி மற்றும் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட அமைப்பாளர் கே.நீலகண்டன் அறிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

# விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் மு.ராசா - கே.கண்ணன் அறிக்கை!

சென்னை,மார்ச்.24-

பகுதி செயலாளர்கள் மு.ராசா கே. கண்ணன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி, கலைஞர்நகர் வடக்கு தெற்கு பகுதி திமுக நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் கோயம்பேடு பூ மார்க்கெட் எதிரில் உள்ள ராயல் பிளாசா ஓட்டலில் இன்று 24.03.2026 காலை 10 மணிக்கு பகுதி செயலாளர்கள் மு.ராசா - கே.கண்ணன் தலைமையில், விருகம்பாக்கம் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, கணக்குநிலைகுழு தலைவர் க.தனசேகரன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இதில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் நடைபெறபோகும் சட்டமன்ற தேர்தலையொட்டி ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் மு.ராசா - கே. கண்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி

# அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை!

## தொகுதி தேர்தல் பொதுப் பார்வையாளர் மேற்கொண்டார்!

சென்னை, மார்ச் 24

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026ஐ முன்னிட்டு, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் கன்ஷியாம் தோரி, தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ். லட்சுமி பிரியா முன்னிலையில், காவல்துறை அலுவலர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று (23.03.2026) அடையாறு மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் நன்னடத்தை நெறிமுறைகள் பின்பற்றி பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், காவல் துறை மற்றும் அலுவலர்களுடன் உரையாடி உரிய ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி, தேர்தல் பொதுப் பார்வையாளர் அவர்கள் தலைமையில், காவல் துணை ஆணையர்கள், உதவி காவல் ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் உதவி செலவினப் பார்வையாளர்கள் குழு, கணக்குக் குழு, வீடியோ பதிவு செய்யும் குழு மற்றும் இதர தேர்தல் பணிகள் மேற்கொள்ளும் அலுவலர்களுடனான தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் என். காளிதாஸ், காவல் துணை ஆணையாளர்கள் ஏ.சி.கார்த்திகேயன், வி.ஆர். சீனிவாசன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி

# திறன் மேம்பாடு பயிற்சிகளை ஊக்குவிக்க ஒன்றிய அரசிடம் திட்டங்கள் ஏதேனும் உள்ளதா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி,மார்ச். 24-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் 18 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன் படுத்துவதன் மூலம், திறன் மேம்பாடு பயிற்சிகளை தொழிலாளர்களுக்கு அளிக்கும் வகையில் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டு துறையில் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? என்றும் அதனால் மற்ற துறைகளிலும் பயன்பாடு கிடைத்துள்ளதா? என்றும் தொழில் முனைவோர் உரிய பயன்பாட்டை அடைந்துள்ளனரா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் மாண்பு மிகு திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:-

திறன் மேம்பாட்டுத் துறையின் வழிகாட்டுதலின்படி 36 தயாரிப்பு துறைகளில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதால் தொழிலாளர்களின் மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டம், ஜன சிக்சான் திட்டம், தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டம், கைவினைஞர்கள் பயிற்சி திட்டம் ஆகியன தொழிற் பயிற்சி நிலையங்கள் இணைந்து நடத்தப்படுவதால் திறன்மிக்க தொழிலாளர்கள் தொடர்ந்து அனைத்து தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது என்றும், 2,595 கல்வித் தகுதிகள் இதுவரை அங்கீகரிக்கப்பட்டு உள்ளது என்றும், இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், தொழிலாளர் துறையின் தலைமை பயிற்சி இயக்குநர் செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில் நுட்பம், ஆளில்லா விமானங்கள், சைபர் பாதுகாப்பு போன்ற புதிய துறைகளும் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிட்டுள்ளார் என்றும், 36 தயாரிப்பு துறை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளனர் என்றும், பிரதம மந்திரி கௌசல் விகாஸ் திட்டத்தின்படி 45 சதவீத தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு அடைந்துள்ளது என்றும், 50 சதவீத தொழிலாளர்களுக்கு வருமானத்தில் உயர்வு அதிகரித்துள்ளது என்றும், ஜன் சிக்சான் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர்.

இவ்வாறு தேசிய பழகுநர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 35 இலட்சம் தொழில் பழகுநர்கள் பயன் அடைந்துள்ளனர் என்றும் ஒன்றிய அரசின் திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

### தமிழ்நாட்டில்

# நடமாடும் மருத்துவமனைகள் செயல்படுத்த நிதி ஒதுக்கப்படுகிறதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 24-

தமிழ்நாட்டில் நடமாடும் மருத்துவமனைகள் MMUs செயல்படுத்த ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறதா? என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் 10 லட்சம் மக்கள் தொகைக்கு ஒரு நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுக்கான மூலதனம் கூடிய செயல்பாட்டுச் செலவுகள் இரண்டையும் ஒன்றிய அரசு வழங்குகிறதா?

அப்படியானால், மாநில வாரியாக நாட்டில் இயக்கப்படும் மொத்த நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுகளின் எண்ணிக்கை தருக?

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் குறிப்பாக வேலூர் தொகுதியில் நடமாடும் மருத்துவ வாகனப் பிரிவுகளுக்கு (எம்எம்யு) ஒன்றிய அரசு நிதி வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்

நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் பெண்களுக்கு மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களை பரிசோதிப்பதற்காக "Hospital on Wheels" நடமாடும் மருத்துவமனைகளுக்கு ஒன்றிய அரசு போதிய நிதியை ஒதுக்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை ராஜாங்க அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ், தொலைதூர கிராமப்புறங்களில் தரமான சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்த, மொபைல் மருத்துவப் பிரிவுக்கான (MMU) நடமாடும் மருத்துவமனைகள் வழங்கிட அந்தந்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு, அவர்களின் அமலாக்கத் திட்டங்களில் (PIPs) அவர்கள் முன்வைக்கும் தேவைகளின் அடிப்படையில் நிதி ஆதரவு கிடைப்பதற்கு வழங்கப்படுகிறது.

10 லட்சம் மக்கள்தொகைக்கு ஒரு நடமாடும் மருத்துவப் பிரிவுக்கான (MMU) மூலதனம் மற்றும் செயல்பாட்டுச் செலவுகளை ஒன்றிய அரசு ஆதரிக்கிறது. நாட்டில் இயக்கப்படும் மொத்த MMU எண்ணிக்கை, மாநில வாரியாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அவன் படி நாட்டிலே அதிக எண்ணிக்கையிலான நடமாடும் மருத்துவமனைகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. தமிழ்நாட்டில் தற்போது 425 நடமாடும் மருத்துவமனைகள் (MMUs) இயங்குகின்றது. இந்தியா முழுவதுமாக மொத்தம் 1453 நடமாடும் மருத்துவமனைகள் இயக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில அரசு வழங்கிய தகவலின்படி, வேலூர் தொகுதியில் 1 பழங்குடியினர் MMU உட்பட 7 MMU இயக்கப்படுகிறது. வேலூர் தொகுதிக்கு MMUகளுக்கு வழங்கப்பட்ட நிதியின் விவரம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

2021-22ல் ரூ.41.64 லட்சம், 2022-23ல் ரூ.41.64 லட்சம், 2023-24ல் ரூ.41.64 லட்சம், 2024-25ல் ரூ.41.64 லட்சம், 2025-26ல் ரூ.41.64 லட்சம்

என ஆண்டுதோறும் ரூ.41.64 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், NHMன் கீழ் உள்ள நடமாடும் மருத்துவப் பிரிவுகள் (MMUs) மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்களுக்கான ஸ்கிரீனிங் உட்பட ஆரம்ப சுகாதார மையத்தின் அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்கின்றன. தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் இயங்கும் நடமாடும் மருத்துவப் பிரிவுகளுக்கு (MMUs) ஒன்றிய அரசு நிதியுதவி வழங்குகிறது. NHM இன் கீழ் MMU களின் செயல்பாட்டு வழிகாட்டுதல்களை அமைச்சகத்தின் இணையதளத்தில் உள்ள பின்வரும் இணைப்பில் அணுகலாம்.

https://nhm.gov.in/images/pdf/programmes/mmu/Mobile Medical Units.pdf

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### தருமபுரி மாவட்டத்தில்

# 'ஸ்டேன்ட் அப் இந்தியா' திட்டத்தின் செயல்பாடுகள் என்ன ?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 24-

தமிழ்நாட்டில் குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டம் பெண்களையும்,எஸ்.சி/எஸ்.டி பிரிவு தொழில்முனைவோரையும் முழுமையாக சென்றடைய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன என மக்களவையில் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

கடந்த 3 ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் இருந்து இந்த திட்டத்தில் பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள்,வழங்கப்பட்டுள்ள கடனுதவி, சராசரி செயலாக்க நேரம்,துறை வாரியான நிறுவன உருவாக்கம் குறித்து ஏதேனும் தரவுகள் உள்ளதா?இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தை பரவலாக செயல்படுத்த மாவட்ட தொழில் மையம் மற்றும் பொது சேவை மையங்கள் மூலம் மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சா ரங்கள், கட்டமைக்கப்பட்ட கையடக்க வசதி, தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட வங்கி ஒருங்கிணைப்பு நடத்தப்பட்டுள்ளதா?



தமிழ்நாட்டில் தருமபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் ஸ்டேன்ட் அப் இந்தியா திட்டத்தினை விரிவாக்கபடுத்த ஏதேனும் சிறப்பு திட்டங்களோ அல்லது மாவட்ட வாரியாக இலக்குகளோ ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த,நிறுவன நிலைதன்மை, வேலை வாய்ப்பு உருவாக்கம்,கடன் அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றிய அரசு கண்காணித்து வருகிறதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன? என்று ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் தருமபுரி எம்.பி.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



ஆர்.கே.நகர்.கிழக்கு பகுதி 39(அ) வட்டம் பாகம் 118 பூண்டி தங்கம்மாள் தெருவில் உள்ள சலவைத் துறையில் 70க்கும் மேற்பட்ட வீடுகளில் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி வெல்லும் தமிழ் பெண்கள் பொறுப்பாளர் யூ.கலைவாணி தலைமையில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாநில சலவை தெ.மு.ச. தலைவர் நெல்லை எம்.எம்.சாமி செய்திருந்தார். இதில் கே.பூங்கோதை, ஜே.ஜெயந்தி, ஜி.சசிகுமார், பி.பாஸ்கர், இ.ஏமந்த்குமார், எஸ்.மதன், பி.பால்பாண்டி, கே.கருப்பசாமி, அய்யனார், சுந்தர்ராஜன், முருகேசன், மற்றும் திரளான பெண்கள் கலந்துகொண்டு வீடு வீடாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.